விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 | ஆனி 27 | றம்ழான் 19 | இதழ் 148

யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 11—7—82

பௌதிகவியல் வகுப்புகள்

83 and 84 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஆசிரியர்கள்:
திரு. தவபாலச்சந்திரன்
திரு. ஸ்ரீதரன்

"திருச் செல்வ ஜோதி"
பொற்பதி றேட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[3829]

## 'அமிர்' சோவியத் செல்வார்

(கொழும்பு)

ஆபிரிக்க, ஆசிய நட்புறவு நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இம் மாதம் 22ம் தேதி சோவியத் யூனியன் செல்ல இருக்கின்றார். இவருடன் திரு. கலீல், திரு. ஜெயபத்திரான ஆகியோரும் செல்வார்கள். (க)

### நியூயோர்க் தமிழ்ஈழ மாநாடு;

# "எமது அரசியல் தூய்மைக்கு கிடைத்த வெற்றியாகும்

## தமிழ்ஈழ விடுதலைமன்றில் வைகுந்தவாசன் இல்லை"

### பத்திரிகையாளர் மாநாட்டில் 'அமிர்'

— நமது நிருபர் சு. மகாலிங்கசிவம் —

(கொழும்பு)

"நியூயோர்க் தமிழ்ஈழ மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்கள் அனைவருமே தமிழ்மக்களிடையே ஐக்கியம் பேணப்படவேண்டிய அவசியம் பற்றியே வலியுறுத்தினர்கள். இந்த மாநாடு எங்களின் அரசியல் நடவடிக்கைகளின் தூய்மைக்குக் கிடைத்த வெற்றியாகும்"

இவ்வாறு நியூயோர்க் தமிழ்ஈழ மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு நேற்றுக்காலை நாடு திரும்பிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்

அவர் இம்மகாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ்ஈழவிடுதலை மன்றக் குழுவில் எட்டுப்பேர் இடம்பெற்றதாக வெளிவந்த செய்தி தவறானதாகும். இக்குழுவில் ஐந்துபேரே இடம் பெற்றுள்ளனர். திரு. கிருஷ்ண வைகுந்தவாசன் இந்த தமிழ்ஈழ விடுதலைமன்றக்குழுவில் இடம்பெறவில்லை.

"நியூயோர்க்தமிழ்ஈழ மகாநாட்டிலும் திரு. கோவை மகேசனும், திரு ஈழவேந்தனும் எமக்கு எதிராகவே செயல்ப்பட்டார்கள் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

நியூயோர்க் தமிழ் ஈழமகாநாட்டில் நிலவிய ஒற்றுமையை இங்கும் எதிர்பார்க்கிறேன்.

"கடந்த இரண்டு வருடங்களிலும் தமிழர் விடுதலை கூட்டணியின் நடவடிக்கைபற்றி இம்மகாநாட்டில் விரிவாக என்னால் எடுத்துக்கூறப்பட்டது".

நானும் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் எமது கடந்தகால நடவடிக்கைகள் பற்றி மாநாட்டில் விளக்கியபோது கூட்டணி சரியான பாதையில் சென்று கொண்டிருந்ததென்ற நிலையை அங்கு சரியாக எடுத்

[8ம்பக்கம் பார்க்க]

## மலேசியா அமைச்சர் மீது படுகொலை குற்றச்சாட்டு!

கோலாலம்பூர். ஜுலை 10 மலேசியாவின் முன்னாள் சபாநாயகரொருவரைப் படுகொலை செய்ததாக அந்நாட்டின் அமைச்சரொருவருக்கும், மற்றும் நால்வருக்கும் எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டு மலேசியா மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இன்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மலேசியாவின் கலாச்சார அமைச்சருக்கெதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## சந்தேகத்தின் பேரில் காருடன் சாரதி கைது!

(புலோலி)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காரொன்றை சாரதியுடன் சந்தேகத்தின் பேரில் "அதிரடிப்படை"யினர் கைதுசெய்து பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிசார் இச்சந்தேக நபரைப் பருத்தித்துறை நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

நீதவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கார் பொலிஸ் பாதுகாப்பில் வக்கப்பட்டுள்ளது. (க)

## ★ நெல்லியடியில் பஸ்களில் பலத்த சோதனை; தேநீர்க்கடைகள்மூடப்பட்டன!

(புலோலி)

நெல்லியடியில் வைத்து ஆயுதப்படையினர் வாகனங்களைக் கடுமையாகச் சோதனையிட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6மணி போல் நெல்லியடி பஸ் நிலையத்திற்கு வந்த ஆயுதப்படையினர் பஸ்வண்டிகளில் வந்த பிரயாணிகளை இறக்கிச்சோதனையிட்டனர்.

நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அருகில் திறந்து வைக்கப்பட்டிருந்த இரு தேநீர்க் கடைகள் மூடப்பட்டன.

இரவு 6 மணிப்படக் காட்சி மட்டுமே காண்பிக்கப்பட்டது. இரவு நேரத்தில் நெல்லியடியில் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

நேற்றுச் சனிக்கிழமை கடைகள் ஒற்றைக் கதவிலேயே வியாபாரத்தை மேற்கொண்டன. தனியார் கல்விநிலையங்கள் காலை நடைபெற்றன. சந்தை காலையில் கூடியிருந்தது. இராணுவத்தினரும், பொலிசாரும் கூட்டுரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இ. போ. ச. பஸ்சேவைகள் வழமைபோல் நடைபெற்று வருகின்றன.

## அளவெட்டி ஆசிரியர் வீட்டில் ரூ 20,500 நகைகள் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

வீடுடைத்து உட்புகுந்த திருடர்கள் 20,500 ரூபா பெறுமதியான நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்

அளவெட்டி வடக்கில் ஆசிரியர் செல்லப்பா இராமநாத பிள்ளை வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இவரும், இவரது மனைவியாரான சிதம்பரம் இராமநாதபிள்ளையும் ஹட்டனில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகிறார்கள் என்றும் அண்மையில் ஆசிரியரும், மனைவியும், உறவினர் ஒருவரின் வீட்டில் நடந்த வைபவத்துக்கு வந்திருந்ததாகவும், மனைவியை அந்த வைபவத்துக்கு சில நகைகளுடன் அனுப்பிவிட்டு, இருபதாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியானமிகுதி நகைகளை தமது சொந்த வீட்டிலுள்ள ஒரு அலுமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு படுத்திருந்தாகவும் மறுநாள் பார்த்தபோது வீட்டு ஓடுகள் கழற்றப்பட்டு, அலுமாரி உடைக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டிருந்ததாகவும் சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட சப்இன்ஸ்பெக்டர் எஸ். சிவதாசன் தலைமையில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இ. கந்தசாமி, ரி. குணசிங்கம் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் அளவெட்டியைச் சேர்ந்த சோமு என்பவரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [மா]

நெல்லியடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு பொலிசார் கொலை, பொலிசார் காயசம்பவங்களின்போது காயப்பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஐந்து வருடத்திற்கு மேல் வியாபார அனுபவமுள்ள விற்பனை லிகிதர் (Sales Clerk) உடனடியாகத் தேவை. இவர் ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல எழுத்து எழுதக் கூடியவராயும், நாற்பது வயதுக்குக் குறைந்தவராயும், நம்பிக்கைக்குரியவராயும் இருத்தல் வேண்டும். தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் 15-07-82முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3812 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8812

சேவிஸ்ரேசனில் வேலை செய்து அனுபவம் உடையவர்கள் உடன் தேவை. பரஸ்க்கோ லுப்றிக்கேசன் சேவீஸ், நல்லூர், யாழ்ப்பாணம். (3815)

ரிங்கர் வேலையில் அனுபவமுள்ள வேலையாட்களும், உதவியாளர்களும் பெயின்ற் வேலை பழகுபவர்களும் தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: உரிமையாளர், அற்லஸ் இன்டஸ்றீஸ், 297, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக, யாழ்ப்பாணம். (3816)

கேபிள், ஐஸ், குளிர்பானம், வீட்டுப்பாவனைக்கேற்ற மின்சார உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கும் அதிகலாபம் தரக்கூடிய பாவனைப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் ஒரு தொழில்நிறுவனம்அமைப்பதற்குபங்குதாரர்கள்தேவை. விண்ணப்பிக்க: விளம்பர இல: 3813, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3813

## வகுப்புகள்

ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்து கற்பிக்கப்படும். இத்துடன் ஆங்கிலம் (உரையாடல்) A/L G. C. E. [O/L] 10-ம், 9-ம், 8-ம் தரங்களுக்கும் கற்பிக்கப்படும். அம்பிகை ரியூட்டரி, போனியோ இல்லம் தொட்டிலடி. சங்கானை கிழக்கு, சங்கானை. 3836


'பியர்' அதன் முழுச் சுவையுடன்.

லயன் லாகர்




ரூபா 15/75


## விற்பனைக்கு

அரசாங்க அலுவலரின் சொந்தப்பாவனையில் சிறந்த நிலையிலுள்ள 9 சிறி தொடர் இலக்க 'ஹில்மன் அவெஞ்ஜர்' (Hillman Avenger) கார் நியாய விலையில் உடனடி விற்பனைக்கு உண்டு. பெயின்ற், டயர்கள், பற்றறி அனைத்துமே புதியவை. தொடர்பு: ஸ்ரீதரன், மின்சார சபை, சுன்னுகம். லீவு நாட்களில் ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. 3820

3½ தொன் Globe Hoist விற்பனைக்குண்டு. தொடர்பு: பரஸ்கோ லுப்றிக்கேசன் சேவிஸ், நல்லூர், யாழ்ப்பாணம். (3814)

7-ம் நம்பர் அல்லர் F பான் பெட்டியுடன் 12 இஞ்சி சிறைண்டர் உடன் விற்பனைக்குண்டு. தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [3825]

புத்தம்புதிய தஞ்சாவூர் வீணைகள் இரண்டு உடனடியாக விற்பனைக்குள்ளன. தொடர்பு; க சிவலிங்கம், 134, பிரதானவீதி, யாழ்ப்பாணம். [3821]

தாவடி சந்திக்கு அருகாமையில் உள்ள ஆனந்தா றெக்கோடிங் பாரில் புத்தம்புதிய பயணியர் செற், பிசர் செற் விற்பனைக்குண்டு. [3796]

Honda C. D. 200 83 ஸ்ரீ 5 ஆயிரம் தொடர் இலக்கம் Datsun 120 Y 6ஸ்ரீ 6ஆயிரம் தொடர் இலக்கம் உடன் விற்பனைக்கு தொடர்பு கொள்ளவும் 234, 236 K.K.S. ரோட், யாழ்ப்பாணம். 3784

யாழ். நகரில் பிரபல்யமான அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; 530, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3837

முற்றிலும் சீரமைக்கப்பட்டதும் ஜப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டதுமான இசுசு E. L. F. (15 சீட்டுகள்' விபரம்: ஹோட்டல் சுபாஸ், விக்டோரியா வீதி யாழ்ப்பாணம். போன்: 7534. [3785]

Sankei Stereo Cassette (4in1)with Organ and Rhythm விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஈஸ்வர் கோர்பரேசன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7308 [3823]

ஆரியர்மடம் பொன்னையா லேனில் (யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு மைல் தூரம்) ஆறு பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு ரூபா ஐம்பதினுயிரத்துக்கு குறையாது. விண்ணப்பிக்க: விளம்பர இல:3832, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3832

ஒட்டுசுட்டான் முத்துஐயன் கட்டு இடதுக்கரையில் 45 ஏக்சர் நீர்ப்பாசன வசதியுள்ள நெல்காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் விற்கப்படும். அ. குமாரசுவாமி, பேராறு, ஒட்டுசுட்டான். 3779

## விற்பனைக்கு

இயக்கச்சிச் சந்திக்கண்மையில் வீடு, கிணற்றுடன் கூடிய 20 பரப்புதென்னங் காணியும், 5 ஏக்கர் நெல் வயலும் (தனியாக) உண்டு. காணி பிரதான வீதிக்கண்மையில். உடன் தொடர்பு கொள்க. ப.பொன்னுத்துரை, 2-ம் குறுக்குத் தெரு, கடற்தொழிற் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம். (கிழமை நாட்களில் மட்டும்) 3827

## சேவை

எந்தவித கட்டிட பிரச்சனையாய் இருந்தாலும் அதை எங்களிடம் கூறுங்கள். உங்களுக்காக அதை நாம் தீர்த்து வைப்போம். Engineering Contracts and Syndicate Business Establishment [சர்வ வியாபார பொறியியல் ஒப்பந்த வேலை ஸ்தாபனம்] 50, மகாத்மா வீதி, நெல்லியடி கரவெட்டி. எல்லாவித கட்டிட வேலைகளையும் வீடு, கந்தோர், தொழிற்சாலை, வீதி... உங்கள் மனம் திருப்திப்படும் படி செய்து கொடுப்போம். 3799

## வாடகைக்கு

இருபாலை சந்திக்கு அருகில் வீடு வாடகைக்குஉண்டு. பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க: விளம்பர இல: 3780, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3780

நாலு அறைகளும், சமையல் அறையும், மின்சார வசதியுண்டு. கட்டுடை நவாலி ரோட்டில் மானிப்பாய் பிரதானவீதிக்கு மிக அண்மையில் விபரங்களுக்கு: சி. திசைவீரசிங்கம், ஆசிரியர், சுதுமலை மத்தி. 3826

திருநெல்வேலி வளாகச் சந்தியில் குடியிருப்பு வசதிகளுடன் வியாபார ஸ்தலமாகவும் பாவிக்கக்கூடிய கட்டிடம் வாடகைக்குஉண்டு. தொடர்பு திருமதி தனபாலசிங்கம், வளாகச் சந்தி, திருநெல்வேலி தெற்கு. 3834

## ஒரு நாள் சம்பளம் வழங்கினர்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் சமயாசமய சிற்றூழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை ஆஸ்பத்திரி கட்டிட நிதிக்கு வழங்கியுள்ளனர்.

இப் பணத்தை ஊழியர்கள் யாழ். வைத்திய சாலை அதிபரிடம் கையளித்தனர். [இ]

## கனடாவில் வேலையற்றோர் அதிகரிப்பு

ஒட்டாவா, ஜூலை 10

கனடாவில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 10.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1930ம் ஆண்டுக்குப் பின்னர் பதின்மூன்றுலட்சம்பேர் வேலையின்றி இருந்தனர். தற்போது 10.9 சதவீதத்தால் இத்தொகை மேலும்அதிகரித்துள்ளது.

இவ் அதிகரிப்பு கனடாவில் பொருளாதாரத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. கனடியப் பிரதமர் திரு. ட்ரூடோ வேதன அதிகரிப்பினை ஆறு சதவீதமாகவும், பணவீக்கத்தினை அரைவாசியாகவும் குறைப்பதற்கான முயற்சிகளை முன் வைத்துள்ளாரென்று தெரிவிக்கப்பட்டது. (கி

## 'திருக்குறள் மணி' இன்று சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

தமிழக அறிஞர் திருக்குறள் மணி' கலாநிதி க. த. திருநாவுக்கரசு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கந்தர்மடம் திருவள்ளுவர் சாலையில் உள்ள திருவள்ளுவர் பணிமனையில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். [அ]


பெட்வோட் (BED FORD)

### வான் விற்பனைக்கு

33 ஸ்ரீ 5401 இலக்கமுடைய 21 அந்தர் எடையுடைய பெட்வோட் வான் விற்பனை செய்வதற்காக கட்டுப்பணத்துடன் கூடிய இலச்சினையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. படிவங்களும், விபரங்களும் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் காரியாலய நேரங்களில் வாகனத்தைப் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி; 19-07-1982 மாலை 4-00 மணிக்கு.

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

(3830)



### Chartered Prelim

நவெம்பர் 1982

1. துரிதமீட்டல் வாரமுடிவு வகுப்புகள் (இரு மொழிப் போதனை)
ஆரம்பம்: 17-07-1982 சனி பிற்பகல்
மனுக்கள்: அன்று நண்பகலுக்கு முன்
2. ICMA Section A: மே 1982
பரீட்சை வினுக்களுக்கு துல்லியமான விடைகள் கொண்ட பிரசுரம்

விபரங்களுக்கு: அதிபர்,

PERCIVALL HALL

சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

[3782]



### தேவை

1. ஆபீஸ் உதவியாளர்
வவனியாவில் இருக்கும் எமது ஸ்தாபனத்துக்கு ஆபீஸ் உதவியாளர் தேவை.
தமிழில் கணக்கு எழுதக்கூடியவரும், ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவராயும் இருத்தல் வேண்டும்.
2. மெக்கானிக்குகள்
எலெக்ரிக் மோட்டோர் பைப், வயரிங் வேலை செய்யக்கூடியவரும் நீர் இறைக்கும் இயந்திரம். திருத்தக்கூடியவராயுமிருத்தல் வேண்டும்.

உடனே விண்ணப்பிக்குக

ஒட்டோஸ் ஏஜென்சீஸ்

109, கண்டி வீதி, வவுனியா.

(3807)



### Wanted: Compositor trainees

Applications are invited by a printing firm in Jaffna from young persons to be trained as Compositors in English and Tamil

1. **Age:** 18 years to 24 years.
2. **Sex:** Both Boys and Girls may apply
3. **Qualifications:** G. C. E. (O/L) with passes in English and Tamil
4. A character certificate from the Grama Sevaka and from two others essential
5. **Training and Employment:** Selected candidates are required to undergo an initial training period for six months, Permanent employment as Compositor apprentices will be offered to successful candidates only after Six months training period.
6. Please send photostat copies of Certificates
7. Applications Close on 20-7-82

Box 200 x
C/o Eelanadu Ltd.
P. O. Box 49
Jaffna.

3803

## லெபனுனிலிருந்து வெளியேறும் பாலஸ்தீனரை ஏற்க சிரியா மறுப்பு!

# இஸ்ரேலியர் பிடி இறுக்கமடைகிறது!

## 'காஸா' மேயர் பதவி நீக்கம்!

பெய்ரூட், ஜூலை, 10

தென் லெபனுனிலிருந்து பாலஸ்தீனியர்கள் வெளியேறுவது குறித்து கருத்து மோதல்கள் இடம்பெற்று வரும் அதே வேளை சிரியா தனது பிராந்தியத்தினுள் லெபனுனிலிருந்து பாலஸ்தீனர்கள் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுத்துள்ளது.

### அனுமதி மறுப்பு

தென் லெபனுனில் பாலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களால் சுற்றிவளைக்கப்பட்டதையடுத்து அவர்கள் சிரியாவுக்கே செல்வார்கள்; அல்லது சிரியா அவர்களுக்குப் புகலிடம் வழங்குமெனஎதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் சிரியா இதற்குத் தற்போது மறுப்புத் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நாடற்றவர்களாகவிருக்கும் பாலஸ்தீனர்கள் தமக்கென ஒரு பிரதேசத்தை வைத்துக்கொள்ளத் தீவிரமாக இயங்கி வருவதும், அதனுல் அவர்கள் தமது நடவடிக்கைகளுக்கு களமாகப் பயன்படுத்திய அந்நியப் பிரதேசங்களும் பலத்த சேதத்துக்குள்ளானதுமே சிரியாவின் இம்மறுப்புக்குக் காரணமாகவிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலின் அண்டை நாடான ஜோர்தானும் பாலஸ்தீனரைத் தனது மேற்குப் பகுதியில் குடியமர்த்துவது குறித்து 'காம்ப்டேவிட்' உடன்படிக்கையிலுள்ள தீர்மானத்தினை முழுமனதுடன்வரவேற்கவில்லையென்பதும், ஜோர்தான் மன்னர் ஹுசைன் கடந்த மாதம் ரஷ்யாவிற்கு மேற்கொண்ட விஜயத்தையடுத்து வெளியாகியிருந்தது. ஜோர்தானின் இவ்விருப்பமின்மைக்கு பாலஸ்தீன களது நடவடிக்கைகளால் ஜோர்தான் பாதிப்படையுமென்பதே காரணமாகவிருந்தது

### சமாதானப் படை

மேற்கு பெய்ரூட்டில் பாலஸ்தீனர்கள் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதனையும், அங்கிருந்தும் அவர்கள் வெளியேறவிருப்பதனையும் அவதானிக்க அமெரிக்கப் பாதுகாப்புப்படைகள் மேல் பெய்ரூட்டிற்கு வருவது குறித்து காரசாரமான விவாதங்கள் நடத்தப்பட்டன. அவ்விவாதங்களின்போது, பாலஸ்தீனர்கள் வெளியேறிய பின்னரா? அல்லது அதற்கு முன்னரா? அமெரிக்கப்படைகள் வரவேண்டுமென பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது பாலஸ்தீனப் பிரதிநிதியொருவர் வெளியேற முன்னரே வரவேண்டுமென்றும், வருவதானுல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன சமாதானப் படையென்ற பதாதாவிலேயே அமெரிக்கப் படைகள் வருதல் வேண்டும் எனவும் கூறினுர்.

### தாக்குதல்

இதேவேளை பாலஸ்தீனர்களை வளைத்துப் பிடித்திருக்கும் இஸ்ரேலியர் நாளுக்கு நாள் தமது பிடியை இறுக்கிவருகின்றனரெனத் தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தினமும் பாலஸ்தீனர்கள் மீது பீரங்கித் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பதிலடியாக பாலஸ்தீனரும் ராக்கெட் தாக்குதலில் இறங்கியிருந்தனர்.

### இஸ்ரேலில் ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலியர்கள் தென்லெபனுனில்நடத்திவரும் தாக்குதல்களுக்கு இஸ்ரேலில் பலத்த எதிர்ப்பு அதிகரித்துவருகின்றது. மக்கள் பல்வேறு நகரங்களிலும் போர் எதிர்ப்பு ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடத்திவருகின்றனர்.

### மேயர் பதவி நீக்கம்

இஸ்ரேலின் மேற்குக்கரை நகரமான 'காஸா' என்னும் நகர முதல்வரான 'ஷவா' என்பவரும் பாலஸ்தீனர்களைப் பகிரங்கமாக ஆதரித்தாரென்றகுற்றச்சாட்டின் அடுத்து பதவிநீக்கத்துக்குள்ளாகியுள்ளார். 'காஸா' பகுதியில் பாலஸ்தீனர்களைஆதரித்ததன்மூலம் பதவியை இழந்த ஏழாவது மேயராகஇவர்கணிக்கப்படுகின்றார்.

பாலஸ்தீன — இஸ்ரேல் மோதல்களை சமாதானமாகத் தீர்த்துவைக்க அமெரிக்க அதிபரின் பிரதிநிதியாக தற்போது பணியாற்றிவரும் திரு. பிலிப் ஹபிப் தென்லெபனுன்,பாலஸ்தீன், இஸ்ரேல் அதிகாரிகளுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளினுல் பலபிரச்னைகள் தீர்க்கப்பட்டுள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## "கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம்"

[நீர்வேலி]

"கூட்டுறவு இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாகும். மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் இவ்வியக்கம் பொருட்களை மலிவான விலையிலேயே விற்கவேண்டும். அவ்வாறு விற்பதன் மூலம் வியாபாரச்சுழற்சி அதிகரித்து இலாபமும் கூடும்."

இவ்வாறு உரும்பிராய் சமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுத்தலைவர் திரு. செ. ஐயாத்துரை வலி கிழக்கு தென் பகுதி ப நோ. கூ சங்கத்தின் மகளிர் குழு உற்பத்தி விற்பனை நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்வைபத்திற்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ. சபாரத்தினம் தலைமை தாங்கினுர் மகளிர் குழு தலைவர் வேதவல்லி கந்தையா உட்படப் பலர் உரையாற்றினர். [கி]

## வீடுடைத்து திருட்டு

[யாழ்ப்பாணம்]

இரவு நேரத்தில் வீட்டுக்காரர் நித்திரையில் ஆழ்ந்திருந்த தருணம் பார்த்து வீட்டுப் பின் கதவை உடைத்து உள்புகுந்த திருடர்கள் புடவைகள், சயிக்கிள் மற்றும் பாவனைப் பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனராம்.

நல்லூர் கோவில் வீதியிலுள்ள யாழ். செயலகதிட்டமிடல் உத்தியோகத்தர் கே. சிவலிங்கம் வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

இத்திருட்டு சம்பந்தமாக யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. [மா

## 'போயிங்' விமான விபத்து

# 140 பேர் மரணம்!

நியூஓலியன்ஸ், ஜூலை 10

அமெரிக்காவின் 'பான்' விமானச்சேவை நிறுவனத்தின் போயிங் விமானமொன்று விபத்துக்குள்ளானது. இதனுல் 143 பயணிகள் கொல்லப்பட்டனர்.

நியூஓலியன்ஸ் விமான நிலையத்திலிருந்து மேலெழுந்த சொற்பவேளையிலேயே இவ்விபத்து சம்பவித்தது. விமானம் கோளாறுக்குள்ளானதும் அது சென்றுகொண்டிருந்த பகுதியிலுள்ள வீடுகளின் மேல் வீழ்ந்ததனுல் எட்டு வீடுகள் சேதமுற்றன. அவற்றிலிருந்தோரும் கொல்லப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுவதுடன் விபத்து நடந்த பகுதியின் வீதியில் நின்றோர் சிலரும் இறந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

விமானம் பறக்க ஆரம்பித்த வேளை மழை, இடி மின்னலுடன் காலநிலை சீரற்றிருந்ததென்றும், மின்னலொன்றின் தாக்குதலாலேயே விபத்து நிகழ்ந்ததென்றும் அறிவிக்கப்பட்டது. (கி)

## இந்து நாகரிகப் பட்டதாரிகளுக்கு

## வேலைவழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ். பல்கலைக்கழக இந்துமன்றத்திடம்

### டாக்டர் கல்பகே நேரில் உறுதி

[யாழ்ப்பாணம்]

இந்து நாகரிப் பட்டதாரிகளுக்கு இதுவரை வேலைவழங்கப்படவில்லை என்றும் அவர்களுக்கு வேலைவழங்க நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். பல்கலைக்சழக இந்து மன்றம் விடுத்த வேண்டுகோள்குறித்து உடன் நடவடிக்கை எடுப்பதாக பல்கலைக்கழக மான்யக் குழுத்தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே உறுதி அளித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்று விஜயம் செய்த டாக்டர் கல்பகே யிடம் இந்துமன்றம் மேற்கண்ட கோரிக்கை அடங்கிய மகஜர்ஒன்றை கையளித்தது.

அம்மகஜரின் விபரம் வருமாறு:

இந்துநாகரிகம் என்றபாடத்தின் பட்டப்படிப்புநெறி எமது பல்கலைக்கழகத்தில் மட்டுமே தற்போது இருக்கின்றது இந்து நாகரிகத்தைச் சிறப்புப்பாடமாகப் பயின்று பட்டம்பெற்றுள்ள பட்டதாரிகள் எவருக்கும் எதுவித வேலைவாய்ப்பும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனுல் இப்பாடத்தைப் பயின்று பட்டம்பெற்றுள்ள பட்டதாரிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதே மிகவும் உகந்ததாகும்.

இன்று பாடசாலைகளில் சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் க.பொ.த. (உ.த) வகுப்புகளில் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகப் பயின்று வருகின்றனர் இந்து நாகரிகப் பட்டதாரிகளே க.பொ.த. உ.த வகுப்புகளில் இந்துநாகரிகம் கற்பிப்பதற்கு உரிய தகைமை பெற்றுள்ளார்கள். இந்துநகரிகத்தை முறையாகப் போதிப்பதற்கு இதுவரை இந்துநாகரிகப் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமிக்கப்படாமையால் இம்மாணவர்கள் மிகவும் கஷ்டப் அடைந்து வருகின்றுர்கள். இந்து நாகரிகத்தை இந்துநாகரிகப் பட்டதாரிகள் அல்லாதவர்கள் பாடசாலைகளில் போதித்து வருவதால் இந்துப்பண்பாடு பல வழிகளிலும் பாதிப்புற்று வருவதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

இந்துநாகரிகப்பட்டதாரிகளே இந்நாகரிகத்தைப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இந்துநாகரிகப் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புப் பற்றிப் பாராளுமன்றத்தில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி பிரஸ்தாபித்தபோது கௌரவ கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக பாரளுமன்றத்தில் உறுதியளித்தமையையும் இங்கு குறிப்பிடவிரும்புகின்றோம். (இ)

### உலக கிண்ண உதைபந்தாட்டம்

## மே: ஜெர்மனி-இத்தாலி

## இறுதி ஆட்டத்தில் மோதுகின்றன

பார்சலோனா, ஜூலை 10

உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் இன்று மோதுவதற்கு மேற்கு ஜெர்மனியும் இத்தாலியும் தகுதிபெற்றுள்ளன.

அரை இறுதிப் போட்டியில் பிரான்சுடன் மோதிய மேற்கு ஜெர்மனி கடும் போட்டிக்கு மத்தியில் 5—4 கோல்களாலும் போலந்துடன் மோதிய இத்தாலி இலகுவில் 2—1 கோல்களாலும் வெற்றிபெற்றன.

பிரான்சுக்கும் மேற்குஜெர்மனிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஆட்ட நேரத்திலும் மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட நேரத்திலும் இருகோஷ்டிகளுமே கோல்களை அடிக்கவில்லை. பின் இருதரப்பினருக்கும் தலா 5 'பனுல்டி' கொடுத்தபோது இத்தாலி 5 கோல்களையும் போலந்து 4 கோல்களையும் அடித்தன. (இ)

## பிரி.வேலை நிறுத்தம் ஒருகோடி டாலர் இழப்பு!

லண்டன், ஜூலை, 10

கடந்த வியாழன் முதல் ரயில்வே சாரதிகள் பிரிட்டனில் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தத்தினுல் ஒரு கோடி டாலர்களுக்கும் அதிகமான இழப்பு பிரித்தானிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வேலை நிறுத்தத்தினுல் லண்டனின் மேற்குப் பகுதியே வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. இங்கு நடத்தப்பட்ட ஆயிரத்துத்தொழாயிரம் ரயில் சேவைகளில் இருபத்தி ஐந்தே தற்போதுநடைபெறுகின்றது.

சில ரயில்வே ஊழியர்கள் தமது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத்திரும்ப விரும்பியிருக்கின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டது அண்மைக்காலத்தில் ரயில்வேப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில மாற்றங்களால் ரயில் சாரதிகள் அதிருப்தியடைந்ததனுலேயே வேலை நிறுத்தத்தில்குதித்திருந்தனர்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர் வேலை நிறுத்தக்காரரை மீண்டும் வேலைக்குத் திரும்பும்படி அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கி)

### பாகிஸ்தானில்:

## "பொதுத் தேர்தல் வேண்டும் இராணுவஆட்சியைநீக்குக" -வழக்கறிஞர்கள்

இஸ்லாமாபாத், ஜூலை 10

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டுமெனக்கோரி லாகூர் வழக்கறிஞர்கள் சங்கம் கூட்டமொன்றை நடத்தியது. இச்சங்கத்தில் பல்லாயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

கூட்டத்தில்இராணுவஆட்சி நீடிக்கப்படுவது நிறுத்தப்படுவதுடன் விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டுமெனக்கோரப்பட்டது.

பாகிஸ்தானின் வேறு பிரதான பகுதிகளிலும் இது போன்ற கூட்டங்களை அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் சங்கங்கள் நடத்தின.

1973ல் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சாசனத்தை மதிக்க வேண்டுமெனவும், லாகூர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் பொதுத் தேர்தலை நடத்தக்கோரி வழக்கறிஞர்கள் கறுப்புப்பட்டி அணிந்து ஊர்வலமொன்றை நடத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி

## ஜனாதிபதி தேர்தலில்

# யு. என். பி. வேட்பாளர் ஜே. ஆர்.

# எதிர்க்கட்சிசார்பிலே யார்?

மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான பொதுத் தேர்தலுக்கு முன்பே ஜனாதிபதித் தேதல் இடம்பெறப்போவது அநேகமாக நிச்சயமாகிவிட்டது.

இதற்கான ஏற்பாடுகளும் இடபொழுது ஜரூராக நடைபெற்றுவருகின்றன. அரசியல் சட்டத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் சில முக்கிய திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேறிய கையோடு எந்த நிமிடத்திலும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறலாம் என்பது அவதானிகள் கூற்று. டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என்பது சிலரின் ஹேஷ்யம்.

பொதுத் தேர்தலுக்கு முன்பே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதனால் பலவிதத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அநுகூலமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

ஆளும் கட்சிக்கு நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள பொதுவான ஆதரவு எப்படி என்பது தெரியவரும். இதன் பெறுபேறுகளை வைத்து பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கலாம். ஜனாதிபதி தேர்தலில் ஈடுபட்டு உழைத்து ஆதரவைத் திரட்டுவதின் மூலம் தற்போது பதவியிலிருக்கும் அரச எம். பி. க்கள் மீண்டும் நியமனம் பெறுவதற்கான தங்கள் தகுதிகளை நிரூபிக்க முடியும்.

பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி கோட்டைவிட்டாலும் கூட ஜனாதிபதி தொடர்ந்து பதவியில் இருப்பார். அரசியல நிலைமைகளை உத்தேசித்து தேர்தலைப் பின்போடவும் வாய்ப்புண்டு.

இப்போதைய நிலைமையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஜனாதிபதி தேர்தலில் அதிக வாய்ப்புக்கள் இருப்பது வெளிப்படை.

தேர்தலுக்கான பிரசார வேலைகளை அக்கட்சி ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. ஜனாதிபதி பதவிக்குத் தாமே மீண்டும் தமது கட்சியின் சார்பில் வேட்பாளராக நிற்கப்போவதாக திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னரே அறிவித்து விட்டார்.

எதிர்க்கட்சிகளின் குறைபாடுகளை எடுத்துக்காட்டுவதிலும், அவைகளின் தகைமையின்மைகளை விளக்குவதிலும் அவர் ஈடுபட்டு வருகிறார் அத்துடன் தமக்குள்ள தகுதிகளையும் எடுத்துக்கூறி வருகிறார்.

எதிர்க்கட்சிகளைப்பொறுத்தவரை ஜனாதிபதி பதவிக்கு இன்னமும் ஒரு பொதுவான வேட்பாளரை அவர்கள் தெரிவு செய்ய முனையவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எவரும் நியமிக்கப்படுவதற்கான அறிகுறியைக் காணேம். அக்கட்சியின் (ஒரு பிரிவின்) தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இத்தேர்தலில் போட்டியிட முடியாது. குடியியல் உரிமைகள் இழந்தவர் என்பதால் வேறு ஒருவருக்கு ஆதரவு தந்து பிரசாரம் செய்யவும் முடியாது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே பொதுத்தேர்தல் நடைபெற்று, அதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனித்தோ அல்லது ஏனைய எதிர்க் கட்சிகளின் ஆதரவுடனே மூன்றில் இரு பெரும்பான்மை கிடைக்கும் வகையில் அரசமைக்கும் சந்தர்ப்பம் இருந்திருக்குமானல் ஒருவேளை அரசியல் சட்டத்தைத் திருத்தவும், இழந்த உரிமைகளை மீளப்பெறவும் வாய்ப்புஏற்பட்டிருக்கலாம். இப்பொழுதுள்ள நிலைமையில் பொதுத்தேர்தல் நடந்தாலும்கூட அந்தக்கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் பதவிக்கு வரும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

முதலில் இரண்டாகப் பிரிந்துபோன இக்கட்சி இப்பொழுது மேலும் பிளவுபட்டிருக்கிறது. திரு. மைத்திரிபாலசேனநாயக்கவின் தலைமையில் ஒரு குழு பாராளுமன்றத்திலும் வெளியிலும் தன்னைத்தானே உண்மையான சிறிலங்கா சுதந்திரக்கட்சியென பறைசாற்றி வருகின்றது

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான மற்ற குழுவில், முன்பு மைத்திரியுடன் பிரிந்துசென்ற அனுரா பண்டாரநாயக்கா திரும்பவும் வந்து சேர்ந்து கொண்டுள்ளதால் உட்பிளவுகள் தோன்றியிருக்கின்றன. இந்த உட்பிளவுகளுக்கு முன்னாள் அமைச்சர் ஹெக்டர் கொப்பேகடுவவும் அநுராவின் மைத்துனர் விஜயகுமாரதுங்கவும் தலைமை வகிக்கிறார்கள்.

இந்த நிலைமையில் ஜனாதிபதி பதவிக்கு யாரை வேட்பாளராக நியமிப்பது என்பதில் அங்கு ஒரு முடிவுக்கு உடனடியாக அவர்கள் வரக்கூடிய நிலைமையில்லை.

இலங்கை கம்யூனிஸ்கட்சி, சமசமாஜக்கட்சி, மற்றும் ஏனைய இடதுசாரி கட்சிகள் ஜனாதிபதி பதவியைப்பற்றி ஏதும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு சிந்திப்பதானலும் பொதுவான ஒருவேட்பாளரையே அவர்கள் ஆதரிப்பதாய் இருக்கும். இடதுசாரிகளுக்கும் சிறிலங்காசுதந்திரக் கட்சிக்குமிடையில் உடன்பாடு ஒன்று ஏற்படும் பட்சத்தில் அவ்வாறு ஒரு பொது வேட்பாளரைக் கண்டுபிடிப்பது சாத்தியமாகும்— கணிசமான வாக்குகளையும் பெற முடியும்.

இடதுசாரிகளிலும் மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜக்கட்சி போன்றவை இவ்வாறன ஒரு ஏற்பாட்டுக்கு உடன்படுவார்களென்று எதிர்பார்க்கமுடியாது.

ஒருவேளை மக்கள் விடுதலை முன்னணி ஏனைய இடதுசாரி கட்சிகளைவிட தனது செல்வாக்கு வளர்ந்துள்ளதென்று காட்டிடும்வகையில் ஒரு வேட்பாளரை நியமித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தேர்தலில்போட்டியிடுவதற்கான தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரம் மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் நவசமசமாஜக் கட்சிக்கும் அண்மையில் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

### தமிழ்க்கட்சிகள்

தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதி தேர்தல் பற்றி அக்கறை காட்டுவதாக இல்லை அவர்களின் ஆதரவு யாருக்கு என்பதும் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

தமிழ்ஈழம் அமைப்பதே தங்கள் இலட்சியமென்று அறிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு முழு இலங்கைக்குமான ஜனாதிபதித்தேர்தலில் அக்கறை இருக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆனல் அகில இலங்கையிலுமுள்ள தங்கள் ஆதரவாளர்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை அவர்கள் சூசகமாகவாவது அறிவிக்காமல் இருக்கமாட்டார்கள். இப்போது உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலைகளில் ஐ. தே. கட்சியையே தமிழர்விடுதலைக் கூட்டணியினர் ஆதரிப்பார்கள் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஒரு வேட்பாளரை ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக நியமிக்கும் என்று ஒரு கருத்து வெளியாகியுள்ளது.

ஐக்கிய இலங்கையையே இலட்சியமாகக் கொண்டுள்ள அ. இ. தமிழ்க் காங்கிரஸ் தன் சார்பில் ஒரு வேட்பாளரை நியமிப்பதில் அர்த்தமுண்டு. வெற்றி பெறுமல்போவது வேறு விடயமானலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நிலையை எதிர்ப்பவர்களின் ஆதரவும் வாக்குச்சீட்டும் தங்களுக்குக்கிடைக்கும் என்று தமிழ்க்காங்கிரஸ் எதிர்பார்க்கக்கூடும்.

ஜனாதிபதித் தேர்தலிலோ மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான பொதுத்தேர்தலிலோ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவா பண்டாரநாயக்க இப்போதைக்குப் போட்டியிட முடியாது என்பது ஒருபுறமிருக்க போட்டியிடும் வேட்பாளர்களுக்காகவும் பிரசாரம் செய்ய முடியாது. போட்டியிடுகிறவர்களும் தமக்கு ஆதரவாக அவரைப்பயன்படுத்திக்கொள்ள முடியாது.

தேர்தல் சட்டத்துக்குக் கொண்டுவரப்படவிருக்கும் திருத்தங்களின்படி ஒரு வேட்பாளரானவர் குடிஉரிமைகளை இழந்த ஒருவரின் செல்வாக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவு ஒன்று பெறப்படுமானல் அந்த வேட்பாளர் போட்டியிடும் மாவட்டம் முழுவதிலுமே அவரது கட்சிக்கான வாக்குகள் எண்ணப்படமாட்டாது.

ஒருகட்சியின் வேட்பாளரையும் அக்கட்சியையும் சங்கடத்துக்குள்ளாக்க விரும்பும்பட்சத்தில் சிவில் உரிமைகள் இழந்த ஒருவர் வேண்டுமென்றே அவர் சார்பில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதைத்தவிர்க்க அல்லது அவ்வாறன நிலைமை உருவாகாமல் இருக்கும்வகையில் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிகின்றது.

இதைக்கருத்தில் கொண்டே சிவில் உரிமை இழந்த ஒருவரின் செல்வாக்கை வேட்பாளர் ஒருவர் தமக்குச்சாதகமாகப் பாவித்துக்கொள்வதைத் தவிர்க்கும் ஷரத்து சட்டத்தில் சேர்க்கப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

- பி. எஸ். பி. -

# இன்று நல்லூர்

## புனித ஆசீர்வாதப்பர் திருவிழா

இன்று நல்லூரில் புனித ஆசீர்வாதப்பர் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது

புனித ஆசீர்வாதப்பர் இத்தாலியில் நோர்சியா என்னுமிடத்தில் பிறந்தார். உரோமையில் கல்வி கற்றபின் காட்டிற்குச் சென்று செபத்திலும் தபத்திலும் தன் காலத்தை செலவு செயதார். பின் பலரை தன்னுடன் சேர்த்து துறவற மடம் ஒன்றை நிறுவி அவர்களின் ஒழுங்குகளையும் தொகுத்தார். இப்போ இந்த சபை 'புனித ஆசீர்வாதப்பர் சபை' என இயங்கி வருகிறது. இவர் தொகுத்த துறவற ஒழுங்குகள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல நாடுகளுக்கும் பரவியதால் இவர் துறவற மடங்களின் மூதாதையர் என அழைக்கப்பட்டார். இவர் தொடர்ந்தும் தம் துறவிகளுக்கு பல மடங்களையும் கட்டி பலரையும் தன் சபைமூலம் புனிதர்களாக்கினர் இவ்வாறு புதுமைகள் மூலமாகவும், சபையின் அயராத சேவையின் மூலமும் பலரையும் சத்திய மறைக்குச் சேர்த்த இவர் 547ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

புனித ஆசீர்வாதப்பரின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் அவரின் நற்குணங்களை எமது வாழ்விலும் கண்டு பாவித்து வாழ்வோமாக.

அருட்செல்வன் ரூபன்

# லண்டனில் நம்மவர்கள் எப்படி இருக்கிறார்கள்?

## நெஞ்சம் மறவாத நினைவுகள் - 1

லண்டனில் நம்மவர்கள் எப்படியிருக்கிறார்கள்?

ஒரே 'பிஸி'!

சோம்பேறிகளைக்கூட சுறுசுறுப்பானவர்களாக்கிவிடும் சக்தி அந்த வெள்ளைக்கார நாட்டுக்கு! சில கால எனது அனுபவம் அதைத்தான் எனக்குப் போதித்தது!

படித்துக் கொண்டிருக்கிற இளைஞர்கள் முதல் பட்டம் பெற்று வேலைசெய்கிறவர்கள் வரை ஓடி ஓடி உழைக்கிறார்கள்!

கணவனும் மனைவியுமாக எங்கெங்கோ வேலைசெய்கிறார்கள்!

படித்துக் கொண்டிருக்கிற இளம் 'என்ஜினியர்'கள் மனைவியர்களை எங்கோ ஓரிடத்தில் வேலையில் சேர்த்து விடுகிறார்கள்.

—மாணவர்கள் 'விசா'வில் இருப்பவர் இரண்டோ, மூன்று வருடத்தில் இலங்கை வந்து, 'லண்டன் மாப்பிள்ளை' என்ற பெயரோடு கைநிறையப் பணத்தோடு, கைப்பிடித்த பெண்ணை லண்டனுக்கு அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

—அவர்களுக்கெல்லாம் தங்கள் செல்லப்பிள்ளைகளைக் கொடுக்கும்போது தங்கள் மருமக்கள் 'என்ஜினியர்கள்' என்றுதான் நினைத்துக்கொள் கொள்கிறார்கள்!

—பரவாயில்லை! இலங்கையில் 'என்ஜினி'யரே உழைக்க முடியாத ரொக்கத்தைத் தங்கள் கணவர்மார் உழைக்கிறார்கள் என்ற நிம்மதியாவது கிடைக்கிறது அந்தப் பெண்களுக்கு!

படித்துப் பட்டம் பெற்று 'என்ஜினியர்'களாகியவர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை! ஆனல், இப்போது படித்துக்கொண்டிருக்கிற மாணவர்கள் 'விசா'வில் இருப்பவர்கள் என்ஜினியர்களாக வருவார்களா? என்பதைமட்டும என்னிடம் கேட்காதீர்கள்!

பாடசாலைகளுக்குக் கட்ட வேண்டிய பணத்தின்தொகை பல மடங்கு இடீரென்று அதிகரித்து விட்டதே 'உண்மை'யாகப் படிப்பதை இவர்கள் கைவிட்டதற்கு காரணம்!

'காசேதான் கடவுளப்பா' என்பதற்கேற்ப ஓடி ஓடி உழைக்கிறார்கள்! —அந்தக் காசைக் கொண்டுபோய் பள்ளிக்கூடத்துக்குகட்டி, 'உழைப்பின் மகத்து'வத்தைக் குறைத்துக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை!

ஆயிரம் ஸ்டேலிங் பவுண் மூவாயிரம் ஸ்டேலிங் பவுண் வரை பாடசாலை 'பீஸ்' வருடத்துக்கு இப்போது உயர்ந்துவிட்டது! (35 ஆயிரம்ரூபா முதல் ஒரு லட்சம் ரூபாவரை வருட 'பீஸ்' என்று இலங்கைப் பணத்தில் கணக்கிடலாம்.

இவ்வளவு தொகையைக் கூட்டுவதிலும்பார்க்க, ஐந்தோ ஆறு வருடத்துக்குக் கணவனும் மனைவியுமாக உழைத்து இலங்கைப்பணத்தில் பத்து லட்சம் ரூபாயுடன் நமது நாட்டுக்குப் போய்ச் சேருவோமே என்ற எண்ணம் நமது இளைஞர்களிடையே ஏற்பட்டுவிட்டது!

தொடர்ந்துலண்டனில்இருக்க வேண்டுமென்பதற்காக மிகக் குறைந்த 'பீஸில்' நடக்கும் ('விசா'வுக்காக மட்டும்) சில பாடசாலைகளில் 150ஸ்டேலிங் பவுணுக்குள்பணம்கட்டி 'அட்மிஷன்' எடுத்து 'விசா' கந்தோருக்கு அதனை அனுப்பி வைப்பதோடு பாடசாலைப் படிப்புச் சரி!

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் நமது உள்ளூர் டியூட்டறிகள் போன்றவை.

நமது மாணவர்களுக்காகவே இந்தப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. பாடசாலைகளுக்குப் போகாமலே இப்பாடசாலைகளில் அவர்கள் வரவு பதியப்பட்டு, வருட முடிவில் வரவு நன்று' என்ற நற்சாட்சிப் பத்திரமும் கொடுக்கப்பட்டு சோதனை நடக்காமலே சோதனை முடிவுகளும் வழங்கப்பட்டு, அவை 'விசா' கந்தோருக்கு அனுப்பப்பட்டு, வெற்றிகரமாக எல்லாமே முடிந்துவிடுகின்றன.

அவர்களும் பிழைக்கிறார்கள்! நம்மவர்களும் வாழ்கிறார்கள்!!

### நம்மவர்கள் மூன்றுவகை

லண்டனில் வாழும் நம்வர்

(5-ம் பக்கம் பார்க்க)

-ராஜகோபால்-

# றமழான் சிந்தனை

நோயாளியின் தூக்கம் வணக்கமாகும். அவருடைய மௌனம் தஸ்பீஹ் ஆகும். அவருடைய கிரியை(யின்) நன்மை இரட்டிப்பாகும். அவருடைய துஆ ஒப்புக்கொள்ளப்படக்கூடியதாகும்.

ஸஹர் முடிவு 4–25
நோன்பு திறக்கும் நேரம் 6–30

தொகுப்பு சுல்பிக்கா கௌது

"சிறுவர்களுக்கு அளிக்கப்படும்

# ஆரம்பக்கல்விதான் அச்சாணியாக அமையும்"

(மண்டைதீவு)

இளம் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் ஆரம்பக்கல்விதான் அவர்களின் ஒளிமயமான எதிர்கால வாழ்வுக்கு அச்சாணியாக விளங்கும்.

இவ்வாறு வேலணையில் புதிதாக அமைக்கப்பட்ட பாலர் பாடசாலையொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய காவலூர் எம். பி. பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

மேற்படி பாலர் பாடசாலை ஆரம்பவிழா திரு வ. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில், மொன்றிசூரி என்ற அமைப்புதான் இப்படியான பாடசாலைகளுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு சர்வோதயம் காந்தியமென்ற சமூகசேவை ஸ்தாபனங்கள் பொறுப்பேற்று நடாத்தவும் இது வழியமைத்துள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்படும் பாலர் பாடசாலைக்கு பாரதி பாலர் பாடசாலை என்று பெயர் சூட்டியதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பாரதியார் சின்னஞ்சிறுபிள்ளைகளுடன் மிகவும் ஈடுபாடு உடையவர். இதனுல்தான் அவர் ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது என்று பாடியுள்ளார் பாரதி நூற்றுண்டு விழாவை உலகெங்கும் கொண்டாடும் இந்த ஆண்டில் அவரது பெயரால் ஒரு பாலர் பாடசாலையை ஆரம்பித்திருப்பது மிகவும் பொருத்தமானது என்ருர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா பேசுகையில்,

பாடசாலைக்கு சேர்க்கும் வயது அதிகரிக்கப்பட்ட காரணத்தால்தான் இத்தகைய பாலர் பாடசாலைகள் நாடெங்கும் தோன்றுவதற்கு காரணமாகவுள்ளது. பாலர் பாடசாலைகளை ஆரம்பித்தால் மட்டும் போதாது. அதை சிறப்பான முறையில் நடத்தவேண்டும். அதற்கு அன்பும் பண்பும் பொறுமையும் இயல்பாகவே குணமாகக்கொண்ட பொறுப்புள்ள ஆசிரியை ஒருவரை நியமிக்கவேண்டும்.

நாம் எதற்கும் அரசாங்கத்தை நம்பியிராமல் எமது சுயமுயற்சியால் முன்னேறப் பழகவேண்டும் இப்பகுதி மக்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும்.

# கிராஞ்சியில் 1000 ஏக்கர் காணிவழங்க ஏற்பாடு

[அரியாலை]

கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் குறைந்தது மூன்று வருட காலம் நிரந்தரமாக வசித்த உழவர் வகுப்பைச் சேர்ந்த ஆட்களுக்கு கிராஞ்சியிலிருக்கும் ஆயிரம் ஏக்கர் மேட்டு நிலக் காணி தலா மூன்று ஏக்கர் வீதம் வழங்கப்படவிருக்கிறது.

காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி காலை 9 மணி முதல் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகத்திலும், கரைச்சி [கிளிநொச்சி] உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகத்திலும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் அல்லது அவரது பிரதிநிதியால் காணிக்கச்சேரி நடாத்தப்படவிருக்கிறது.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல்லவராயன் கட்டு பொன்னுவெளி கிராம உத்தியோகத்தர் பிரிவில் 'கிராஞ்சி' காணி அமைந்துள்ளது

காணிக்கச்சேரி மூலம் காணி பெற விரும்புபவர்கள் அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் யாழ். அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்கவேண்டுமாம். [அ]

# இ. த. ஆ. சங்க யாழ்.கிளை இந்திய கல்விச்சுற்றுலா

(அரியாலை)

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க யாழ்ப்பாணக் கிளை தென்னிந்தியாவில் 'கல்வி கலாசாரச் சுற்றுலா' ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

அடுத்த மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் இக் கலாசாரச் சுற்றுலாக் கோஷ்டியினர் புரட்டாதி மாதம் 14ந் திகதி யாழ்ப்பாணம் திரும்புவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புகையிரதமூலம் புறப்படும் இக் கோஷ்டியினர் மதுரையிலிருந்து விசேஷ பஸ்மூலம் பழனி, கோயம்புத்தூர், நீலகிரி, ஊட்டி, குடகுமலை, மைசூர், பங்களூர், காஞ்சிபுரம், சென்னை, மகாபலிபுரம், பாண்டிச்சேரி, சிதம்பரம், காரைக்கால், நாகபட்டினம், வேளாங்கண்ணி, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலான இடங்களுக்குச் சென்று நாடு திரும்புவர்.

## குங்குலியக்கலயர் வரலாறு

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்று வரும் சொற்பொழிவில் இன்று குங்குலியக்கலயர் வரலாறு பற்றி திரு சிவ-மகாலிங்கம். பேசவுள்ளார்.

## நல்ல பண்பாளர்



நல்லவர்களை இறைவன் நீண்டகாலத்திற்கு இவ்வுலகில் விட்டு வைப்பதில்லை. தன்னுடன் சேர்த்துக்கொள்கின்ருன் என்பது உண்மைதான். பருத்தித்துறையைச் சேர்ந்த கூசைப்பிள்ளை சவரிமுத்து தனிப்பெரும் பண்பாளன், மக்களுடன் அன்பாகப் பழகுபவர். சமூகசேவையில் ஈடுபட்டுவந்தவர். பிரான்சிஸ்கா என்ற பெண்ணை மணந்து ஐந்து பிள்ளைகளைப்பெற்று வெளிநாட்டிற்கு வேலைபெற்றுச் சென்ற இவர் அங்கு விபத்தில் சிக்கி மரணமடைந்து ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது பல கலை, கலாசார நிகழ்ச்சிகளின் முன்னின்று செயற்பட்ட இவரின் இழப்பு கலை உலகிற்கே பேரிழப்பாகும்,

— நண்பன்

# "திறமை சாலிகளை கௌரவிக்க வேண்டும்"

[நீர்வேலி]

எம் சமூகத்திடையே இலைமறை காய் போல பலதிறமைசாலிகள் ஒவ்வொரு துறைகளிலும் உள்ளனர். இவர்களை அரங்கிற்கு கொண்டுவந்து கௌரவிக்க வேண்டியது அவசியமானது. அப்படிக் கௌரவிப்பதால் மேன் மேலும் திறமைசாலிகளை உருவாக்க முடியும்.

இவ்வாறு நீர்வேலி காமாட்சிஅம்டாள் ஆலய முன்றலில் நடைபெற்ற திருவூஞ்சற் பதிக வெளியீட்டு விழாவில். திருவூஞ்சற் பதிகத்தை ஆக்கிய 'திரு' தெட்சணமூர்த்தி கோபாலசிங்கம் அவர்களை கௌரவித்து பொன்னடை போர்த்துகையில் யாழ் வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. வைத்தியநாதன் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கலந்துகொண்ட தொழிலதிபர் திரு, க. கனகராசா "வித்தகன்" என்னும் பட்டத்தை திரு. கோபாலசிங்கத்துக்கு வழங்கினுர். மலர் வெளியீட்டுரையை திருமதி. வசந்தா வைத்தியநாதன் நிகழ்த்தினுர். சைவப்புலவர் செ. குணபாடுலசிங்கம் பாராட்டுரை வழங்கினுர். காமாட்சியம்பாள் இந்து பரிபாலின சபையாரால் ஏற்பா செய்யப்பட்ட இவ்விழாவிற்கு அதன் தலைவர். க. சின்னராசா தலைமை தாங்கினுர் செயலாளர் த. பரராசசிங்கம் நன்றியுரை கூறினுர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# லண்டனில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்!

1972ஆம் ஆண்டுக்கு முன் சென்றவர்கள். இவர்களுக்கு பிரிட்டிஷ் அரசு எவ்விதபிரச்சினையுமின்றி அந்த நாட்டில் தங்குவதற்கு அனுமதிகொடுத்துள்ளது. இவர்களில் பலர் எந்தவித வேலையையும் செய்பவர்களாக இருக்கிருர்கள்!

இவர்களில் சிலர் படித்து நிபுணர்களாகவும் எக்கவுண்டன்களாகவும் 'என்ஜினியர்' களாகவும் மதிப்பான வேலை செய்பவர்களாகவும் இருக்கிருர்கள்!

இரண்டாவது வகையினர் 1972ஆம் ஆண்டுக்குப் பின்னர் வந்து படித்தும், படிக்காமலும் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டவர்களைப்போல வாழ்பவர்கள்! இவர்களில் சிலர், சில குறிப்பிட்ட துறையில் பட்டம் பெற்று, விசேட 'வேர்க் பர்மிட்' கிடைத்து, வேலை செய்பவர்களும் உண்டு!

மூன்ருவது வகையினர் உல்லாசப்பயணிகளாக வந்து லண்டனைச் சுற்றிப்பார்த்துக்கொண்டிருப்பதாகக் கூறி, பணம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறவர்கள்! குறுகியகால உல்லாசப்பாணிகளாகவந்து அங்குமிங்குமாக ஓடியாடி உழைப்பவர்கள் இவர்கள்!

இந்த உல்லாசப்பயணிகளில் கணவனும் மனைவியுமாகக் கூடவந்து உழைப்பவர்களை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

ஆறுமாத விசாவில் வந்தவர்கள், ஒருவருடமாகி, ஒரு வருடம் இரண்டு வருடமாகி, நான்கு, ஐந்தும் கூட 'உல்லாசப்பயணி'களாக இருப்பவர்களும் இருக்கிருர்கள்!

'கம்பியூட்டரை'வைத்து அற்புதங்களையே செய்துகொண்டிருக்கும் வெள்ளைக்காரனுல், இந்த 'உல்லாசப்பயணி'களின் நீண்டநாள் விடுமுறை 'மர்மத்தைக் கண்டு பிடிக்கமுடியவில்லை என்பதை நினைக்கும் போது நமவர்களிடம் அவர்கள் 'பிச்சை' வாங்கவேண்டும் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது!

லண்டனில் இந்தியர்களையும் பாகிஸ்தானியர்களையும் கைஅயர்களும் கூடுதலாகவேலை செய்கின்றனர் சில தொழிற்சாலைகளைச்சென்று பார்த்தேன்.

வெள்ளைக்காரர்களே இன்றை நடாத்துகிருர்கள், ஆனலும் ஆசியாக்காரர்களின் உழைப்பில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிருர்கள்! இலங்கையர்கள் மீது ஆகக்கூடுதலான நம்பிக்கையை வைத்திருக்கிருர்கள்!

லண்டன் நகரில் விம்பிள்டன் பிரசித்திபெற்ற இடம் வருடாவருடம் உலக டெனிஸ் வீரர்கள் பட்டத்தைப்பெறுவதற்காக விம்பிள்டனில் விளையாடுவார்கள்!

இந்த விம்பிள்டனில் ஒரு பெரிய 'லோன்றி' இருக்கிறது அதனை 'சலவைத் தொழிலகம்' என்று தமிழில் குறிப்பிடலாம்.

உள்ளூரிலுள்ள 'லோன்றி' யைக் கண்ணுக்குள் கொண்டுவராதீர்கள்! லண்டனிலுள்ள பல 'ஐந்து ஸ்டார்' ஹோட்டல்களின் துணிகளையெல்லாம் வெளுத்துத்தள்ளும் 'ராட்சத' சலவைத்தொழிற்சாலை சுமார் 400 பேருக்கு மேல் வேலைசெய்கிருர்கள்.

வெளுப்பது முதல், இஸ்திரிகை போடுவது வரை எல்லாமே பெரிய பெரிய யந்திரங்கள் தான்!

'ராட்சத' வெளுவை' யந்திரங்கள் எல்லாம் இங்குண்டு! வெள்ளைக்காரர்களும் வேலை செய்கிருர்கள் ஆனல் இங்கு முக்கிய பகுதிகளையெல்லாம் ஆட்சி செலுத்துவது நமது இலங்கை இளைஞர்கள்தான் என்பதைப் பெருமையோடு சொல்லவேண்டும்!

—இந்த லோன்றியின் ஒரு பகுதி 'சுப்பவைசர்' தமிழ் இளைஞர் ஒருவர்!

இலங்கைத்தமிழ்யுவதிகளும் சிலர் இங்கு வேலைசெய்கிருர்கள்.

தினசரி ஒருவர் பதினைந்து ஸ்டேலிங் பவுண் வரை இலங்கைப்பணத்தில் 500ரூபாவுக்கு மேல் இலங்கையர் ஒருவர் உழைக்கிருர்.


இந்த நிறுவனத்தின் மனேஜராக கடமையாற்றுகிற திரு கூலிங் என்பவரது சுறுசுறுப்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது.

அவர் தனது மனேஜர் அறையில் இருப்பது சிலநிமிட நேரங்கள் மட்டும்தான்! மற்றபடியெல்லாம், தொழிற்சாலைக்குள் ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருப்பார்!

அந்த யந்திரத்தை வேகமாக இயங்கவைப்பார், இந்த வேலையின் வேகத்தை அதிகரிக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச்செய்வார்கள் —இப்படியே ஒரு தொழிலாளியாக மாறிவிடுவார்!

அறைக்குள் இருந்து கையெழுத்துப் போடுவது மட்டும் வேலையென்று நினைக்கும் மனேஜர் வேலையால் எவ்வித பிரயோசனமுமில்லை அந்த நடைமுறை மாறினுல்தான் வெற்றியாக ஒரு நிறுவனத்தை நடாத்த முடியும் என்பதை அந்த வெள்ளைக்கார மனிதர் எனக்கு எடுத்துணர்த்திக் கொண்டிருந்தார்,

## உலக சாதனை முயற்சி



ஒற்றைக்காலில் நின்று உலக சாதனை முயற்சியில் நல்லூர் அரசடியைச் சேர்ந்த க. விமலேஸ்வரன் என்பவர் ஈடுபட்டுள்ளார். ஸ்ரீதரன் விளையாட்டுக் கழக உறுப்பினரான இவர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் சாதனை முயற்சியை நேற்று முன்தினம் காலை ஆரம்பித்தார். யாழ். மாநகர ஆணையாளர் திரு ஸி. வி. கே. சிவஞானம் ஆசிகூறி இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

மற்றும் யாழ் சன்மார்க்க வித்தியாலய முன்னுள் அதிபர் திரு க. மகேசன், யாழ் மாநகர சபை உறுப்பினர் திரு. ஆ. துரைராசசிங்கம், ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் திரு மு. கனகரத்தினம், திரு. சி. இராசு ஆகியோரும் ஆசியுரை வழங்கினர்.

இந்த உலகசாதனை முயற்சியை வைத்திய கலாநிதி ஜே பி. சி. பிலிப், மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ் மரி-தாஸ் ஆகியோர் கண்காணித்துவருகின்றனர். (ம—அ

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

போன்:7199 தந்தி: வைரம்

# கிளிநொச்சி செய்திகள்

[நமது நிருபர்
கே. வி. கே. திருலோகமூர்த்தி]

மரத்தில் இருந்து சீவல் தொழில்செய்துகொண்டிருந்த 50 வயதான சீவல் தொழிலாளி ஒருவர் தவறி விழுந்து மரணமானார்.

நெஞ்சை உருக்கும் இச்சம்பவம் கிளிநொச்சி திருவையாறில் நடைபெற்றது. இப்பரிதாப மரணத்திற்குள்ளானவர் கிளிநொச்சியைச் சேர்ந்த எம். ரத்தினம் என்பவராவார். மரத்தால் விழுந்ததும் உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானுர்.

மரணவிசாரணையை மேற்கொண்ட யாழ்ப்பாண மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் எஸ். பிரான்சிஸ் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினுர். சாட்சிகளை கிளிநொச்சி பொலிசைச் சேர்ந்த திரு. எம். கணேசதுரை ஆஜர் செய்தார்.

## நண்பனைப் பின்பற்றி மரணம்

தனது இணை பிரியாத நண்பன் மரணமான பாதைக்கே தாம் செல்லவுள்ளதாகக் கூறிவந்த 21 வயது இளைஞர் ஒருவர் இறுதியில் நஞ்சிடம் தஞ்சமடைந்து தமது உயிரைப் போக்கிக்கொண்டார். இவரது நண்பரும் தற்கொலை செய்து கொண்டது குறிப்பிடத்தக்கது இவ்வாறு மரணமானவர் பரந்தன் கமலிக்குடாவைச் சேர்ந்த பெ. இராசகுமார் என்பவராவார்

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பதில் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். பி. பரராசசேகரம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசைச் சேர்ந்த திரு. எம் கணேசதுரை ஆஜர் செய்தார். பிரேதபரிசோதனையை கிளிநொச்சி பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பி. நவரத்தினராசா நடத்தினுர்.

காலமானவரின் தந்தை வி. பெரியசாமி, பி. இரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என தீர்ப்பு வழங்கினுர்.

மரணமான இராசகுமாரின் சகோதரியை இவரது இணைபிரியாத நண்பர் ஒருவர் காதலித்து வந்ததாகவும் இக்காதலுக்குகாதலனின் பெற்றோர் மறுப்புத் தெரிவித்ததால் கடந்த வாரம் சகோதரியின் காதலன் தற்கொலை செய்து கொண்டதாகவும் அன்றிலிருந்து காலமானவர் விரக்தி நிலையில் காணப்பட்டதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

## சுகாதாரப் படக்காட்சி

சுகாதாரப் பகுதியினரால் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி முன்றலில் இலவச சுகாதாரப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது. ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் பி. நவரத்தினராசாவின் ஏற்பாட்டில் இப்படம் காண்பிக்கப்பட்டது.

## கவலையீனம் உயிரைக்குடித்தது

உரிய நேரத்தில் நோய்க்குச் சிகிச்சைபெருததால் நோய் முற்றி வீதியில் விழுந்து இறந்தார். இப்பரிதாப நிலைக்காளானவர் கிளிநொச்சி 156-ம் கட்டையைச்சேர்ந்த 40 வயதான எஸ். நடராசா என்பவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்து மரணவிசாரணை அதிகா திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச்சேர்ந்த எம். கணேசதுரை ஆஜர்செய்தார். கவலையீனத்தால் நோய்முற்றிய நிலையில் மரணம் சம்பவித்ததாக மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர்.

## "மாணவர்நலனில் பெற்ருேருக்கு அக்கறையில்லை"

பின்தங்கிய பகுதிப்பாடசாலைகளை வளர்ச்சி அடையச் செய்வது மிகவும் கஷ்டமான செயல், எத்தனையோ இடர்பாடுகள் மத்தியில் இந்தப் பாடசாலையை நாம் வளர்ச்சியடையச் செய்துள்ளோம். கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஒன்பதாவது ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் பிரஸ்தாப கல்லூரி அதிபர் திரு பொன். தில்லைநாயகம் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக முன்னுள் கிளிநொச்சிப் பட்டினசபைத் தலைவர் திரு இ கிருஷ்ணராசா கலந்து கொண்டார்.

இன்றைய பெற்ருேர்கள் மாணவரின் நலனில் போதிய அக்கறை இன்றி காணப்படுகின்றனர். நமது மூதாதையர் காலம்போல் பாடசாலைகளுக்குப்பிள்ளைகளை ஆசிரியர்களாகிய நாங்கள் தேடிச்சென்று கூட்டிவரவேண்டியநிலை இன்று உருவாகிறது. இந்நிலைமை தொடர்ந்து இடம்பெறுமாஞல் எதிர்காலச்சிருர்களின் வாழ்வுபாழடிக்கப்படும்" என்று அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்

கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## 'ஞானசவுந்தரி'

கிளிநொச்சி லோங்ஸ்தாபன இளைஞர் கழகத்தினரால் 'ஞானசவுந்தரி' என்னும் நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது ஸ்தாபன இயக்குநர் வண. பிதா. ரி. மதுரநாயகம் தலைமையில் லோங்ஸ்தாபனக் கலை அரங்கில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றது.

## கும்பாபிஷேகம்

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது கிளிநொச்சித் தொகுதியின் பலபாகங்களில் இருந்தும் பெருந்தொகையானோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர் குருகுல அதிபர் திரு. வே, கதிரவேலுவின் சமயச் சொற்பொழிவும் இடம் பெற்றது,

## "கிளிநொச் பின்தங்கிய தொகுதியல்ல"

"கிளிநொச்சிப் பிரதேசத்தை எல்லோரும் பின்தங்கிய தொகுதி எனக்கூறுகிருர்கள், இத்தொகுதி பின்தங்கிய தொகுதி இல்லை. இது அபிவிருத்தி அடைந்துவரும் தொகுதியாகும்."

மேற்கண்டவாறு கிளிநொச்சி பரந்தன் ருேட்டரிக் கழகப் புதிய தலைவர் பதவியேற்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சுப்பிரமணியம் கூறினுர்.

புதிய தலைவராகத் தெரிவான திரு. எஸ் குலசேகரம் பிள்ளைக்கு ருேட்டரிக்கழக மாவட்ட ஆளுநரின் பிரதிநிதியான யாழ்ப்பாண ருேட்டேரியன் இ. பாலசுப்பிரமணியமும், முன்னுள் கிளிநொச்சி பரந்தன் ருேட்டரிக்கழகத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. வி. ரி சிவலிங்கமும் பதவிப்பிரமானம் செய்து வைத்தனர்.

பரந்தன் நவஜீவன் அதிபர் வண. பிதா. எஸ். தம்பிராசா ருேட்டேரியன் பா. வை ஜெயபால ஆகியோரும் உரையாற்றினுர்கள். [அ]



கலாபவனம் சாந்தினி சிவநேசனின் மாணவர், கௌரி கந்தையா, ரமணன் கந்தையா ஆகியோரது பரத நாட்டிய அரங்கேற்றம், யாழ். வீரசிங்க மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற இருக்கிறது. நிகழ்ச்சிக்கு டாக்டர் கே. சிவஞானரத்தினம் தலைமை வகிப்பார்.

# "சகல மக்களாலும் நேசிக்கப்பட்ட நீதவான்"

## பரு. நீதிமன்றத்தில் அஞ்சலி

(புலோலி)

பக்தியாளர்களுக்குக் கடைசிப் பிறப்பு மனிதப் பிறப்பாக இருக்கவேண்டும். பக்தியாளனுன காலஞ்சென்ற நீதவான் மகேசன் கர்மவினையிலிருந்து நீங்கிக் கொண்டார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்ருேம்.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற இருக்கை கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானபோது காலஞ்சென்ற நீதவான் திரு. கே. எஸ், மகேசனுக்கு அஞ்சலி செலுத்தி உரையாற்றிய பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ். நாகலிங்க முதலி குறிப்பிட்டார். பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எஸ். இராசநாதன், பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு வி. பி. சுந்தரலிங்கம் ஆகியோர் பிரசன்னமாக இருந்தபோது உரையாற்றிய சட்டத்தரணி நாகலிங்கமுதலி தொடர்ந்து குறிப்பிட்டதாவது

1979ம் ஆண்டு நீதிபரிபாலன சேவையில் நியமிக்கப்பட்டு 1981ம் ஆண்டு பருத்தித்துறை நீதிமன்ற நீதவாஞக நியமனம் பெற்ருர் திரு. மகேசன்.

சர்வமத நிகழ்ச்சிகளில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்த திரு. மகேசன் தலைசிறந்த பேச்சுச் சாதுரியமுடையவர். மிக எளிதில் மக்களுடைய அன்பைப் பெறக்கூடிய அளவில் மக்களுடன் பழகி வந்தமையால் எல்லோராலும் நேசிக்கப்பட்டார்.

மக்களுக்கு நீதி சரியாக வழங்கப்படவேண்டும். நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது மக்களுக்கு நீதி வழங்கப்படுகிறது என்பது தெரியவும் வேண்டும் என்ற ரீதியில் திரு. மகேசன் செயற்பட்டு வந்தார். சைவசமய நடவடிக்கைகளிலும், இதிகாச புராணங்களிலும் கைதேர்ந்த வல்லாளன். தலைசிறந்த பக்திமான்.

பக்தியாளர்களுக்குக் கடைசிப்பிறப்பு மனிதப் பிறப்பாக இருக்கவேண்டும். பக்தியாளனுன திரு. மகேசன் கர்மவினையிலிருந்து நீங்கிக் கொண்டார். அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்ருேம்.

பனிப்புலம் அம்மன் ஆலயம்

# ஆலயப்பகுதியில் அமைதி நிலவ ஏற்பாடு

[பண்டத்தரிப்பு]

கடந்த ஐந்து வருட காலமாக பூசைகள் எதுவுமின்றி பூட்டப்பட்ட நிலையில் இருக்கும் பனிப்புலம் அம்பாள் ஆலயத்தில் கடந்த வாரம் நடைபெற்ற அசம்பாவிதசம்பவங்களை அடுத்து வலிமேற்கு உதவி அரசாங்க அதிபரின் ஆலோசனையின்பேரில் தொண்டர்சபை ஒன்றை பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் நிறுவியுள்ளது. இந்த ஆலயப் பகுதியில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி பாதுகாப்பை ஏற்படுத்து முகமாகவே 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்தத் தொண்டர் சபை அமைக்கப்பட்டிருப்பதாக பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. வ. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மேற்படி ஆலயத்தில் கடந்த சில நாட்களாக அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்று வருவதாக ஆலய பரிபாலன சபையினர் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. செந்தில்வடிவேலுவுக்கும், காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இதனை அடுத்து வலிமேற்கு உதவி அரசாங்க அதிபரின் ஆலோசனையின்பேரில் பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்கு அமைதியையும் பாதுகாப்பையும் நிலவச் செய்யுமுகமாக 15 இளைஞர்களைக் கொண்ட தொண்டர் சபையை அமைத்துள்ளது. இதேவேளை காங்கேசன்துறை பொலிசாரும் ஆலயப் பகுதிக்கு விரைந்து விசாரணை நடாத்திவருகின்றனர்.

ஊர்காவற்றுறையில்

# இன்று அஞ்சலி

(வண்ணர்பண்ணை)

அமரர் பதமநாதனின் அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிறு மாலை ஊர்காவற்றுறை தமிழர் சுயாட்சிக் கழக செயலகத்தில் சட்டத்தரனி இ. சபேசன் தலைமையில் நடைபெறவிருக்கிறது,

சட்டத்தரணிகளான செ. கோடீ வரன், த. சோமசுந்தரம், இ. பாலாசுப்பிரமணியம். சி. பொ, மயில்வாகனன் ஆகியோர் உட்படபலர் உரையாற்றுவர். (அ)


## மீண்டும் மலிவு விற்பனே!

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்

★ மின்சார உபகரணங்கள் ★ பாடசாலை உபகரணங்கள்

★ வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கு

கெமிவிக்ஸ் - பைன்டர்கம் விநியோகஸ்தர்

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள், மின்சார ஒப்பந்தகாரர்) கடைத்தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8291

தலைமையகம்:

பேர்ள்லேட்ஸ் அம்பலவாணர் & சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு - 11

தொலைபேசி: 24821 — 28244

லெட்சுமி பவான்

97, ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

போன்: 24821

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீதேவி
**பைலட் பிரேம்நாத்**
[புதிய பிரதி]

## வருந்துகிறோம்

நேற்று 10-7-82 சனிக்கிழமை ஈழநாடு' இதழ் 7-ம் பக்கத்தில் 'நல்லூர் இளைஞர் ஜெகநாதசர்மா மறைவு' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் 'நல்லூர் இளைஞர் ஜெகநாதசர்மா நாகேஸ்வரசர்மா மறைவு என்றிருக்கவேண்டும். தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30 சனி, ஞாயிறு2-30
கொழும்பில் 300 நாட்களாக ஓடிக்கொண்டிருக்கும் வெற்றிச்சித்திரம்
கமலஹாசன்
ஸ்ரீதேவி
முத்துராமன்
**குரு** (கலர்)

**ராணி** (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
**விஸ்வரூபம்**
[ஈஸ்ட்மன் கலர்]

**ஸ்ரீதர்** (யாழ்.நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
சுருளிராஜன்
**காசி யாத்திரை**
12-7-82 முதல் அவன் அவள் அது

**ராஜா** [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
கடைசி வாரம்
* ரஜனிகாந் * சுஜாதா * விஜயன்
* கராத்தே மணி * ரதி
**அன்புக்கு நான் அடிமை**
[ஈஸ்மன் கலர்]

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 3-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
**அலைகள் ஓய்வதில்லை** (கலர்)

**றீகல்** [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
4-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
**மோகனப் புன்னகை**
(கலர்)

**Windsor** (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
**THE GAME OF DEATH**
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
**லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு**

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
**ராஜபார்வை**

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
இப்பொழுது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த பரபரப்பூட்டி
**52-வது வெற்றித் தினமாக காட்சியளிக்கிறது**

வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின் மற்றுமோர் சாதனை! சிவாஜி, எம். ஜி. ஆர். நடிப்புகளை நினைவுபடுத்தும் கமலின் நடிப்பு!
கமலஹாசன் (இரட்டை வேடம்)
சுஜாதா, சுமன், அம்பிகா, தங்கவேலு.
—கலர்—
**கடல் மீன்கள்**

## நூல் விமர்சனம்

நூல்;— அபிராமி அந்தாதி ஆய்வுரை (இரண்டாவது செய்யுள்)

ஆசிரியர்;— புலவர் கே. சந்தானராமன்.

வெளியீடு; — வழக்கம்பரை சன சமூக நிலையம்.

அபிராமியந்தாதி ஆய்வுரை முழுநூலும் அமையக் கூடிய புத்தகம் 1 பாடலுக்கு மட்டும் உரிய உரையுடன் விளங்குகின்றது. உரையைப்படிக்கும்போது உரையாசிரியரின் அறிவை வியக்கவும் அம்பாளின் பெருமையையும் கருணையையும் நினைத்து மகிழவும் வாய்ப்பு உண்டாகின்றது.

''சுருதிகளின் வேதங்களின்) பணையுங் கொழுந்தும் பதிகொண்டவேரும்'' என்ற தொடரின் பொருளும் பாடலின் பயனும் ஒருமுறை நூலை படிப்பவர் மனதிலேயே நிலைத்து நின்று உற்றுழி உதவும் தன்மையன தன்கிளையினை வெட்டுபவருக்கும் கொழுந்தைக் கிள்ளுபவருக்கும் நிழல் கொடுக்கும் மரம்போல வேசம் தர்மம் ஆகிய நிழலைக் கொடுக்கின்றது. அம்பாள் கருணையாகிய நிழலைக்கொடுக்கின்றாள்.

தமிழ் மொழிப் பண்பில் காண்டிகையுரை — விருத்தியுரை என்பனபோன்ற அமைப்புக்களுக்கு வித்தியாசமான புதியமுறையில் ஆய்வுரை அமைந்திருப்பது செய்யுள் இலக்கியப்பயிற்சி இல்லாதவர்களும் சுலபமாக உரையையும் பாடலையும் எளிதில் படித்து மகிழக் கூடியதாகவுள்ளது,

-- அருளாளன்

## ஆசிரியருக்கான ஞான ஒடுக்கம்

(அரியாலை)

புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ ஆசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கான ஞானஒடுக்கம் இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை சுன்னுகம் கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது.

காலை திருவிருந்தாராதனையுடன் ஆரம்பமாகும் இந்த ஞான ஒடுக்கத்தில் வேதப்படிப்பு, கலந்துரையாடல் என்பன நடைபெறும். மாலை கிறிஸ்தவ ஆசிரிய சங்க மகாநாடு நடைபெறுவதுடன், மாலை நான்கு மணியளவில் ஞான ஒடுக்கம் முடிவடையும் இதற்கான ஏற்பாடுகளைச்செயலாளர் திரு. பி. ஈ. தனராஜசிங்கம் செய்துள்ளார். [அ]

## பரு. நீதிமன்றம்

(புலோலி)

பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே. எஸ். மகேசன் திடீர் மரணமானதையடுத்து கடந்த 8-ம் திகதி தொடக்கம் யாழ், மேலதிக நீதவான் திரு. பி. சுந்தரலிங்கம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவானுகக் கடமையாற்றி வருகின்றுர்.

## கொழும்பில் இன்று மணிவிழா பாராட்டு

(பம்பலப்பிட்டி)

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக பீடத்தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் மணிவிழா பாராட்டு வைபவம் இன்று ஞாயிற்று மாலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கிறது.

அகிலஇலங்கை இந்துமாமன்றத்தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வீரகேசரி ஆசுரியர் திரு. கே.சிவப்பிரகாசம், தினகரன் ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன், திரு. சோ. சிவபாதசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவர். கலைமகள் ஆசிரியர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் இவ்விழாவில் சிறப்புப்பேருரைநிகழ்த்துவார். (அரி-நி)

## நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அபி. சங்கம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் அபிவிருத்தி சங்கக் கூட்டம் வித்தியாசாலை அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

நடப்பாண்டின் நிர்வாகிகள் தெரிவில் தலைவராக வித்தியாலய அதிபர் திரு. க. மாணிக்கவாசகரும், உபதலைவராக திரு. வை வேலாயுத பிள்ளையும், செயலாளராக திரு சி. சின்னராசாவும், உபசெயலாளராக திருமதி ஜீ. சரோஜினிதேவியும், பொருளாளராக பிரம்மஸ்ரீ கு. பாலசுப்பிரமணிய ஐயரும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகக் குழு உறுப்பினர்கள்; ஆசிரியர்கள் திருவாளர்கள் ஆ. வே. துரைரத்தினம், இ.கந்தசாமி, திரு. கு. கிருபாகரன், திரு த. குணமணி, திரு. சி. சண்முகரத்தினம், திருமதி தி.கோடீஸ்வரரத்தினம்.

## இராமலிங்கம் ஞானசம்பந்தன்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராமலிங்கத்தின் மறைவு பெரும் இழப்பாகும் காவத்தை நகரஓவசியராக இருந்தஇவர் கொழும்பு முகத்துவாரம், வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம் ஆகியவற்றுக்கு பதினறு ஆண்டுகளாக பொருளாளர், தலைவர், உபதலைவர் ஆகிய முக்கிய பதவிகளை வகித்து சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தலைவராக இருந்த காலத்தில் சங்கத்தின் மண்டபத்தைக் கட்டிமுடிக்க அரும்பாடுபட்டவர்.

'சம்பந்தன்' என்ற நண்பர்களால் அன்பாக அழைக்கப்படும் இவர் சமயப்பணியும், பொதுப்பணியுமே தன் வாழ்வென வாழ்ந்தவர்.

நிர்வாகசபைக்கூட்டங்களில் பிரச்னைகளை அவர் அணுகும் முறைபாராட்டத்தக்கது.

எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இவரது குழந்தைத்தனமானமுகம் எந்நேரமும் புன் முறுவல்பூத்த வண்ணம் இருக்கும்!

இவரது சேவையை வடகொழும்பு. இந்து பரிபாலன சங்கம் இழந்துநிற்கிறது! இந்த இடத்தை இனியார்தான் நிரப்புவார்களோ?

- சிவக்கொழுந்து
(முன்னுள் வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தவர்)

அபி சபையின் முதலாண்டு
## தீவுப்பகுதியில் சிரமதானநிகழ்ச்சி

(மண்டைதீவு)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் முதலாவது ஆண்டு நிறைவு பெறுவதையிட்டு தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க பிரிவிலுள்ள கிராமசேவை அலுவலர் பகுதிகளில் சிரமதான வேலைகள் நடைபெறவிருக்கின்றது.

இச்சிரமதான பணியின் சிறப்பு அம்சமாக இம்மாதம் 15ம் திகதி மண்டைதீவு கிழக்கு கடற்கரையில் ஏற்பட்டு வரும் கடல்அரிப்பை தடுத்து அணைக்கட்டு அமைக்கப்படவிருக்கின்றது. இச்சிரமதான வேலையில் மண்டைதீவுப் பகுதியிலுள்ள பொது ஸ்தாபன உறுப்பினர்களும் பொதுமக்களும் பெரும் திரளாக கலந்து கொள்ளவிருக்கிறுர்கள்.

## கேள்வி விளம்பரம்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டணப் பொதுச் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீனசந்தையின் கீழ்மாடியிலிருக்கும் 14 கடைகளுள் இரு கடைகளைத் தவிர்நத ஏனைய 12 கடைகளும் 1-8-1982ம் திகதி தொடக்கம் வாடகைக்கு கொடுப்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 26-7-82 நண்பகல் 12-00மணி வரையும் சபையினுல் ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி கேள்விகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் யா/ அ. ச. உப அலுவலகம் பண்டத்தரிப்பு பட்டணசபையினுல் 22-7-82 பி. ப. 2-00 மணிவரை கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-யும் கேள்விப் பத்திரக் கிரயமாக ரூபா 25/-யும் செலுத்தும் ஒவ்வொருவருக்கும் வழங்கப் படும்.

மேற்படி கடைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரே தடவையில் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 30.000/-க்கும் குறையக் கூடாது. மேலும், குறிப்பிட்ட கடைகள் ஒவ்வொன்றிற்கும் பிரதான விலை மதிப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையுடன், ஒரே தடவையில் செலுத்தப் படவேண்டிய கூடுதலான கேள்வித் தொகையை யார் உரியநேரத்தில் செலுத்துகின்றுர்களோ அவர்களுக்கே, குறிப்பிட்ட 12 கடைகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் ''தெரிவுரிமை வழங்கப்பட்டு அவர் விரும்பிய கடையும் வழங்கப்படும்.''

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு, யாழ். அபிவிருத்திச் சபை செயலாளர் அவர்கட்கு மூலப்பிரதியை அனுப்பும் இதே வேளையில், இணைப் பிரதியை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யா/ அ. ச. உபஅலுவலகம், பண்டத்தரிப்பு பட்டணம் என முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

மேலும் கேள்வி விளம்பரத்திற்கான நிபந்தனைகள், விபரங்கள் யாவும், யா/ அ. சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தேவநேசன் நேசையா,**
யாழ். அபிவிருத்திச்சபை,
யாழ்ப்பாணம்.

யாழ். அபிவிருத்திச்சபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
8-7-1982.

3831

# ★ ''முப்படை, பொலிஸார் போன்று கி.சே.அலுவலரை பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றுக''

## யாழ். மாவட்ட சங்கம் கோரிக்கை

## துப்பாக்கி அனுமதியும் கேட்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

''முப்படையினரையும் பொலிசாரையும் போன்று கிராமசேவை அலுவலர்களையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ்க்கொண்டு வருவதுடன் அவர்களுக்குத் துப்பாக்கி அனுமதிப்பத்திரமும் வழங்க வேண்டும்''

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட கிராமசேவை அலுவலர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மேட்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

திரு. கே. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கிராமசேவை அலுவலர் பொலிஸாரின் கடமைகளை ஆற்றுவதாலும் அரசியல் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாலும் பொலிசாரையும் முப்படையினரையும் போல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டுமென்றும் முன்போல் துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

### சிங்களத் தேர்ச்சியிலிருந்து விலக்களிக்கவும்

'மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் தமிழ் பேசும் கிராம சேவை அலுவலரைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்டத்துக்குள் இடமாற்றம் பெறுவதால் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விடுவிக்கப் படவேண்டும்''

''கிராம சேவை அலுவலர்களுக்கு மாதாந்தம் வழங்கப் படும் பிரயாணச் செலவு நிரந்தரமாக சம்பளப்பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்''

இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (மா

# கடற்கரையில் ஆணின் சடலம்

(மாவிட்டபுரம்)

கீரிமலையை அடுத்துள்ள வலி தூண்டல் என்ற இடத்தில் கள்ளுத்தவறணைக்குப்பின் புறமாக கடற்கரையில் இனந் தெரியாத ஆணின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

45 வயது மதிக்கத்தக்க இந் நபர் வேட்டி, ஷேர்ட் அணிந்துள்ளார். இவரது சடலத்துக் கருகே நஞ்சுப் போத்தல் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது

சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (இ)


**TRUST TRAVEL SERVICE**
HIRDRAMANI ARACADE
65, CHATHAM STREET
COLOMBO 1
TELEPHONE: 548409 OR 548811

★ குறைந்த கட்டணத்தில் ★
உங்கள் டிக்கெட்டுகளை முன் கூட்டியே
பதிவு செய்து கொள்ளவும்

கொழும்பு/செக்கோசுலேவியா OR ரோபியா
**Colombo/Prague or Sofia**
**Visa** உடன் **Rs 7700/-**

கொழும்பு/ரோம்
**Colombo/Rome** **Rs 7600-/**

கொழும்பு/லண்டன்
**Colombo/London** **Rs 7600/-**

கொழும்பு/சிங்கப்பூர் (இருவழி ரிக்கற்)
**Colombo/Singspore (Return)**
**Rs 6450/-**

கொழும்பு/கராச்சி
**Colombo/Karachi** **Rs 2650-/**

யாழ்ப்பாணத்தில்
ரஸ்ற் ரவல் சேவிஸ்
11/A மொம்சாக்கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8111 3841


## நியூயோர்க் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்காட்டினேம்''.

### வைகுந்தவாசனுக்கு ஆதரவு இல்லை

''வைகுந்தவாசனின் இடைக்கால தமிழ் ஈழ அரசு அமைக்கும் தீர்மானத்திற்கு நியூயோர்க் மாநாட்டில் ஆரம்பத்தில் ஆதரவு இருந்தது போலும், என்னுடைய பேச்சுக்கும், தலைவர் சிவசிதம்பரத்தின் பேச்சுக்கும் பின்னர் அவரின் இத்தீர்மானத்திற்கு ஆதரவு இருக்கவில்லை''

''இம்மகாநாட்டில் தலைவருக்கு அடுத்ததாக நான்தான் முதல் பேச்சாளராகப் பேசினேன். என்னிடம் ஏராளமான கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றிற்கு நான் விரிவானமுறையில் பதிலளித்தேன்''.

### விடுதலை அணிபற்றி பேசப்படவில்லை

''இம்மகாநாட்டில் தமிழ் ஈழ விடுதலை அணி பற்றி எதுவுமே பேசப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிபற்றியே பேசப்பட்டது. இந்த மகாநாட்டில் உதயசூரியன் கொடியே ஏற்றப்பட்டது''.

''வெளிநாட்டில் வாழும் தமிழர்களுடன் கூட்டணிக்கு செய்தித் தொடர்புகளிலிருந்த இடைவெளிதான் அவர்கள் கூட்டணிபற்றித் தப்பான அபிப்பிராயம் கொள்ள காரணமாகவிருந்தது. அந்த இடைவெளிக்கு ஒருபாலத்தை ஏற்படுத்த இந்த மாநாடு வாய்ப்புத்தந்தது''.

### மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி

''மாவட்ட அபிவிருத்தி சபைபற்றி இம்மாநாட்டில் நான் விளக்கியபோது, அது பற்றி இதுவரை காலமும் நிலவிவந்த தப்பான கருத்துக்கள் நீக்கப்பட்டு, அதனை மகாநாட்டில் கலந்து கொண்டோர்கள் ஏற்றுக் கொண்டார்கள்''.

### அமைச்சர் கருத்து பொய்யாகும்

''நியூயோர்க் தமிழ் ஈழ மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு புறப்படு முன்னர் நான் எவருக்குமே எவ்வித வாக்குறுதியையும் அளித்து விட்டுச் செல்லவில்லை. இது தொடர்பாக அமைச்சர் திரு. தேவநாயகம் வெளியிட்ட கருத்து முழுப்பொய்யானதாகும்.

''எமக்கிடையேயுள்ள ஒற்றுமையீனம் தான் எமது லட்சியத்தை நனிவடையச் செய்யுமே தவிர வேறெதுவும் அதனை நனிவடையச்செய்யாது.

### கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன

அரசாங்கத்துடன் கூட்டணி நடத்திவந்த பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது தொடர்பாக திரு. அமிர்தலிங்கத்திடம் நிருபரொருவர் கேள்வி கேட்டபோது; 'நாம் சமர்ப்பித்திருந்த கோரிக்கைகள் யாவும் அரசாங்கத்தால் நிறைவேற்றப் பட்டுள்ளதால் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் தேவை ஏற்பட்டால் நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்'' என்றும் திரு அமிர்தலிங்கம் பதிலளித்தார்.

''அரசியலமைப்பில் கொண்டுவரப்படவுள்ள தேர்தல் திருத்தங்கள் பற்றித் தான் இன்னும் படித்துப் பார்க்கவில்லையென்றும் அதனை படித்தபின்னரே இது தொடர்பாகக் கருத்து வெளியிடமுடியுமென்றும் திரு. அமிர்தலிங்கம் நிருபரொருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

### வெளிநாட்டு பிரதிநிதிகள்

நியூயோர்க் தமிழ்ஈழமகாநாட்டில் மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஆகியநாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும், தமிழ்நாட்டிலிருந்து காந்தி காமராஜ் காங்கிரஸ் திரு. நெடுமாறன, அ. தி. மு. க. திரு. ஜனார்த்தனன், தி. மு. க. வழக்கறிஞர் ராதாக்கிருஷ்ணன், திரு. சிட்டிபாபு, (தி. மு. க இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு இளைஞர் பிரிவுத்தலைவர் திரு. தங்கபாலு, மற்றும் அரு. கோபாலன் சேதுராமன் ஆகியோரும் பார்வையாளராகக் கலந்து கொண்டதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

ஐ நா. மனிதஉரிமைகள் சங்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் பேராசிரியர் பிளெவுஸ்சின்னும் நியூயோர்க் தமிழ் ஈழ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். [ம-வெ]

## முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி



சு. சுப்பிரமணியம் செட்டியார்

தோற்றம்:- 22-05-1928

மறைவு:- 22-06-1981

எமது அன்புத் தெய்வமே!

நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவு எய்துகிறது உங்கள் பிரிவால் கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் நாங்கள் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— மனைவி, மக்கள், மருமக்கள், பேத்திமார்.

158/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 3840

## நெல்லியடி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைச் சிப்பந்தி தர்மசீலன் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்: இவரது சிறுநீரகப்பகுதி தாக்கப்பட்டுள்ளபடியினால் குழாய் மூலமே சிறுநீர் எடுக்கப்பட்டு வருகின்றது. (க)


## சபிட்சத்திற்கு வழிகாட்டி

நம்பிக்கை - நாணயம் - அநுபவம்
உங்கள் முதலீட்டிற்கு இவை உத்தரவாதம்

**SHABRA UNICO FINANCE LTD..**

நிதி ரீதியான உதவிகள்:

1. உங்களுக்கு வர்த்தக ரீதியிலும், விவசாயத்துறை ரீதியிலும், வாகனங்களை, உபகரணங்களை கொள்வனவு செய்ய உதவும் விதமாக வாடகை கொள்வனவு நிதி உதவி வழங்கப்படும்.
2. வீடமைப்பு, விவசாயம், கைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்.
3. நீங்கள் விற்கவிருக்கும் காணிகள் வீடு வளவுகள் ஆகியவற்றை சிரமமின்றி நல்ல விலைக்கு விற்றுத் தருவோம்.

வேறும் பல தேவைகள் எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

**SHABRA UNICO FINANCE LIMITED**

(இலங்கை மத்தியவங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

அலுவலகம்
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4
Tel:- 589310


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 33-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூலை மீ 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.